



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், கடல் பல்லுயிர் பாதுகாப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாக சென்னை, கிண்டியில் 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தமிழ்நாட்டின் முதல் கடல் ஆமை பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் முதன்மை தலைமை வன பாதுகாவலரும் தலைமை இயக்குநருமான ஐ. அன்வர்தீன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘‘தமிழ்நாடு நகர்ப்புற பசுமைக் கொள்கை – 2026’’ ஐ முதல்வர் வெளியிட்டார்!

# தமிழ்நாட்டின் முதல் - கடல் ஆமை பாதுகாப்பு மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, செப். 7-

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், கடல் பல்லுயிர் பாதுகாப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாக சென்னை, கிண்டியில் 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தமிழ்நாட்டின் முதல் கடல் ஆமை பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல் நாட்டி, தமிழ்நாடு நகர்ப்புற பசுமை கொள்கை - 2026 யை வெளியிட்டார்.**

**கடல் ஆமை பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல் நாட்டுதல்**

அழிந்து வரும் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள் கூடு கட்டும் வாழ்விடங்களில் மிக முக்கியமான ஒன்று தமிழ்நாட்டின் கடற்கரையோரம் ஆகும். ஒவ்வொரு ஆண்டும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் கடற்கரையோரங்களில் பரந்த பகுதிகளில் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள் பெரிய அளவிலான கூடுகளை கட்டுகின்றன. உலகின் ஆறு கடல் ஆமை இனங்களில், ஐந்து இனங்கள் இருக்கும் இந்தியாவின் ஒரே மாநிலம் தமிழ்நாடு. இது அதன் உலகளாவிய சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

கடல் ஆமைகள் இயற்கையாகவே மிகக் குறைந்த உயிர்வாழ்வு விகிதத்தை உடையவை. ஆயிரம் குஞ்சுகளில் ஒன்று அல்லது இரண்டு மட்டுமே வளர்ந்து முதிர்ந்த நிலையை அடைகின்றன. இந்த குறைந்த வாய்ப்புகளும் மீன்பிடி நடவடிக்கைகளை தவறாக கையாளுதல், கடற்கரை வாழ்விட சேதம், செயற்கை விளக்குகள், கடல் மாசுபாடு, காலநிலை மாற்றத்தின் விளைவுகள் மற்றும் அதிகரிக்கும் கடற்கரை வளர்ச்சி போன்ற மனிதர்களால் உருவாக்கப்படும் மாற்றங்களாலும் மேலும் அச்சுறுத்தப்படுகின்றன.

இந்தச் சவால்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு கடந்த பல ஆண்டுகளாக ஒருங்கிணைந்த, அறிவியல் சார்ந்த மற்றும் பல துறைகளின் அணுகுமுறை மூலம் கடல் ஆமை பாதுகாப்பிற்கு முயற்சிகளை எடுத்து வருகிறது. இது மீன்வளத் துறை, இந்திய கடலோர காவல்படை, கடலோர பாதுகாப்பு குழு, மாவட்ட நிர்வாகம், ஆராய்ச்சி நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மீனவர் சமூகங்களுடன் நெருக்கமான ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடல் ஆமைகள் முட்டையிடும் காலங்களில் பெரிய அளவிலான இரவுநேர ரோந்துப் பணிகள், கடற்கரைகளில் ஆமைக்குஞ்சு பொரிப்பகங்களை (hatcheries) நிறுவு தல் மற்றும் நிர்வகித்தல், மீனவர்களுக்கான விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பிற துறைகளுடன் இணைந்து கூட்டு கடல் ரோந்து மற்றும் சட்ட அமலாக்கம் ஆகியவை அடங்கும். தற்செயலான ஆமை இறப்புகளைக் குறைக்க அரசு 2,000 க்கும் மேற்பட்ட Turtle Excluder Devices கருவிகளை விநியோகித்துள்ளது. மேலும், இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) மற்றும் மேம்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு நிறுவனத்துடன் இணைந்து செயற்கைக்கோள் தொலைத்தொடர்பு (satellite telemetry) மற்றும் ஃபிளிப்பர் டேக்கிங் (flipper tagging) ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளது. இத்தொடர் முயற்சிகள் அளவிடக்கூடிய பாதுகாப்பு ஆதாயங்களை ஏற்படுத்தியுள்ளன.

கடல் ஆமைகளின் முட்டை சேகரிப்பு 2019 - 20 ஆம் ஆண்டில் 70,700 ஆக இருந்தது, 2024-25 ஆம் ஆண்டில் 3.20 லட்சமாக வரலாற்று உச்சமாக அதிகரித்துள்ளது. குஞ்சுகள் பொரிப்பதும் இதேபோல் 2020-21 ஆம் ஆண்டில் 1.16 லட்சத்திலிருந்து 2024-25 ஆம் ஆண்டில் 2.87 லட்சமாக உயர்ந்துள்ளது, இது நிலையான கள அளவிலான நடவடிக்கைகளின் செயல்திறனை எடுத்துக்காட்டுகிறது.

கடல் ஆமை பாதுகாப்பிற்கு வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் செயல்பாட்டு சிக்கலை நிவர்த்தி செய்ய, உலக வங்கியுடன் இணைந்து தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் (TNSHORE) திட்டத்தின் கீழ், சென்னை, கிண்டியில் 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் ஆமை பாதுகாப்பு மையம் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த மையம் அறிவியல் ஆராய்ச்சி, டெலிமெட்ரி, கண்காணிப்பு மற்றும் மையப்படுத்தப்பட்ட தரவு மேலாண்மை ஆகியவற்றிற்கான சிறப்பு உட்கட்டமைப்பை வழங்குவதோடு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு மையமாகவும், பொதுக்கல்வி மற்றும் சமூக தொடர்பு தளமாகவும் செயல்படுவதோடு, தொடர்புடைய துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்திற்கான ஒரு முக்கிய மையமாகவும் செயல்படும்.

இந்த மையத்தை நிறுவுவதன் முலம் தமிழ்நாட்டின் நீண்டகால கடல்சார் பாதுகாப்பு முயற்சிகள் வலுப்படும். மேலும், தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் (TNSHORE) திட்டத்தின் நோக்கங்களுடன் இணைந்த அறிவியல் ரீதியாக இயக்கப்படும், சமூக ஆதரவு மற்றும் வலுவான கடல் ஆமை பாதுகாப்பில் மாநிலத்தை மேலும் உயர்த்தும்.

**தமிழ்நாட்டின் முதல் நகர்ப்புற பசுமை கொள்கை - 2026 வெளியீடு**

தமிழ்நாட்டை காலநிலை தாங்குதிறன் கொண்ட, வாழ்வதற்கு உகந்த மற்றும் நிலையான நகரங்களாக உருவாக்கும் நோக்குடன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று தமிழ்நாடு நகர்ப்புற பசுமை கொள்கை - 2026ஐ வெளியிட்டார்.

**கொள்கையின் பார்வை மற்றும் வடிவமைப்பு**

தமிழ்நாடு நகர்ப்புற பசுமை கொள்கை - 2026, மாநிலம் முழுவதும் நகர்ப்புற திட்டமிடல் மற்றும் வளர்ச்சியில் மரங்கள், நகர்ப்புற காடுகள், பூங்காக்கள், ஈரநிலங்கள் மற்றும் நீலம்-பச்சை உட்கட்டமைப்புகளை ஒருங்கிணைப்பதற்கான விரிவான மற்றும் முன்னோடி கட்டமைப்பை வழங்குகிறது. வேகமான நகரமயமாதலால் உருவாகும் சவால்கள், நகர வெப்பத் தீவு விளைவு, காற்றுத் தரக் குறைவு, நகர உயிரியல் பல்வகைமை இழப்பு மற்றும் பசுமை வெளிகள் குறைதல் போன்ற பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் இக்கொள்கை வடிவமைக்கப் பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் காலநிலை மாற்றக் காட்சிநோக்கு, காலநிலை நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் நடப்பு பசுமை முயற்சிகளுடன் இக்கொள்கை ஒத்திசைவாக உள்ளது.

**கொள்கையின் முக்கிய அம்சங்கள்**

துறைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்த மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழுவும், நகர்ப்புற பகுதிகளில் பசுமை முயற்சிகளை ஊக்குவிக்க, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் தனித்த நகர்ப்புற வனப் பிரிவும் அமைக்கப்படும்.

நகர அளவிலான நகர உயிரியல் பல்வகைமைத் திட்டங்களும், நகர்ப்புற பசுமைக்கான குறுந்திட்டங்களும் தயாரிக்கப்படுவதோடு, புவியியல் தகவல் முறை, கார்பன் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு, கண்காணிப்பு டாஷ்போர்டுகளும் அமைக்கப்படும்.

அனைத்து துறைகள் மற்றும் முகமைகள் தங்கள் திட்டங்களில் உரிய பங்கினை பசுமை மற்றும் நிலப் புதுப்பிப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கிடவும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs), நகர்ப்புற பசுமை நடவடிக்கைகளுக்காக “Green Fee” வசூலிக்கும் வாய்ப்பையும் பரிசீலிக்கும்.

நிர்ணயிக்கப்பட்ட நகர்ப்புற பசுமை காரணியை (Urban Greening Factor) எட்டும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு ஊக்கத்தொகைகள் வழங்கப்படுவதோடு, ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும், தங்களின் மொத்த நகரப் பரப்பளவில் குறைந்தபட்சம் 15 சதவீத பகுதியை பசுமை பரப்பளவாகப் பராமரிக்க முயற்சிகள் மேற்கொள்ளும்.

NatureBased Solutions Institute, Sweden பரிந்துரைத்த 330300 நகர பசுமை வாழ்தகவு வழிகாட்டுதலை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பின்பற்ற முயற்சிப்பதோடு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ‘சிங்கப்பூர் குறியீடு’ (Singapore Index) என அழைக்கப்படும் நகர உயிரியல் பன்மை குறியீட்டை (City Biodiversity Index) உருவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொருவருக்குமான பசுமை வெளிப் பரப்பு கிடைப்பதை மேம்படுத்தும் நகர மற்றும் பிராந்திய வளர்ச்சித் திட்ட வழிகாட்டுதல்களை இக்கொள்கை ஊக்குவிப்பதோடு, ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பும், உள்ளூர் மர வகைத்தேர்வை ஊக்குவிக்கும் தொழில்நுட்ப வழிமுறைகளின் கீழ் நகர்ப்புற பசுமை நர்சரிகளை நிறுவி பராமரிக்கும்.

மரப் பூங்காக்கள், நகர உயிரியல் பல்வகைமை பூங்காக்கள், நகரக் காடுகள் போன்றவற்றை உருவாக்க இக்கொள்கை ஊக்குவிப்பதோடு, சமூக பங்கேற்பும், சமூக பொறுப்புணர்வும் நகர்ப்புற பசுமை மயமாக்கும் முயற்சிகளும் ஊக்குவிக்கப்படும்.

மின்னணு (Digital) கண்காணிப்பு மற்றும் தகவல் பலகைகள் (Dashboards) மூலம் நகர்ப்புற பசுமை நடவடிக்கைகள் விரிவாக கண்காணிக்கப்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் ஆண்டுதோறும் நகர பசுமை அறிக்கைகளை வெளியிடவும் ஊக்குவிக்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புற பசுமைக் கொள்கை - 2026, நகர வளர்ச்சியில் சூழலியல் அம்சங்கள் அடங்கி இருப்பதை உறுதி செய்யும் அரசின் முடிவினை வலுப்படுத்துவதோடு, பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் மாநில அளவிலான பசுமை முயற்சிகளை இக்கொள்கை மேலும் உறுதிப்படுத்துகிறது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், வளர்ச்சி ஆணையங்கள் மற்றும் தொடர்புடைய துறைகள் படிப்படியாக நகர்ப்புற பசுமை பரப்பளவை (Green Cover) அதிகரித்து, காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற, சூழலியலுக்கான கொள்கை வழிகாட்டியாக அமையும்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத் துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் முதன்மை தலைமை வன பாதுகாவலரும் தலைமை இயக்குநருமான ஐ.அன்வர்தீன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க. மகளிர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு மகளிர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - மு. மகாலட்சுமி கலைஞர் இல்லம், 77, செல்லம் குடியிருப்பு, காந்தி நகர் - 2, உடுமலைப்பேட்டை - 642154, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - சி. விஜயலட்சுமி 128/101, பத்ரகாளியம்மன் லே அவுட், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - செ. அனிதா 2/100, சாந்தாமணி நகர், போடிப்பட்டி, உடுமலைப்பேட்டை - 642154, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எ. ஷாஹிதா 5/187, லயன்ஸ் அருகில், பெரிய வாளவாடி, உடுமலைப்பேட்டை - 642132, திருப்பூர் மாவட்டம். 2) கே. சுசீலா 3/106, கலைஞர் இல்லம், குடிமங்கலம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642201, திருப்பூர் மாவட்டம். 3) ஆர். உமாமகேஸ்வரி 6/135, எம்.கே. காம்பளக்ஸ், பெதப்பம்பட்டி, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 4) தா. பாரதி 3/73, பஜனை கோவில் வீதி, பெதப்பம்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 5) ஜி. பாரதி 2/203, எரிசினம்பட்டி, உடுமலைப்பேட்டை - 642207, திருப்பூர் மாவட்டம். 6) மு. சர்மிளா பானு 237, மெயின் ரோடு, குமரலிங்கம், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642204. வலைதளப் பொறுப்பாளர்கள் - 1) சு. உமாமகேஸ்வரி 42, திருவள்ளுவர் வீதி, ஜமீன் ஊத்துக்குளி, பொள்ளாச்சி - 642004, திருப்பூர் மாவட்டம். 2) நா. பவித்ரா 6ஏ, 5வது வீதி, வி.வி. லே-அவுட், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - ரா. சரஸ்வதி 171/9, கே.பி.எஸ். நகர், வேலவன் மோட்டார்ஸ் பின்புறம், தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - மா. அருக்காணி 86டி, மீனாட்சிபுரம், கொளஞ்சிவாடி, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - கே.வி. மணிமேகலை 1/39, சாணக்காடு, கந்தசாமிபாளையம், பசுவப்பட்டி, சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பா. சரஸ்வதி 225, கிளாங்குண்டல் கிளாங்குண்டல் அஞ்சல், மூலனூர் - 638106, திருப்பூர் மாவட்டம். 2) பா. காயத்ரி 75/1, சிக்காம்பாளையம், நத்தக்காட்டுவலசு, பரஞ்சேர்வழி, காங்கேயம் - 638701, திருப்பூர் மாவட்டம். 3) சு. ரேவதி 4/4எ, எரச்சப்பாடி, எரச்சப்பாடி அஞ்சல், தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம். 4) சுமதி 45, ஈஸ்வரன் கோவில் வீதி, முத்தூர் - 638105, திருப்பூர் மாவட்டம். 5. அ. சந்தானலட்சுமி வயக்காட்டுப்புதூர், கத்தாங்கண்ணி அஞ்சல், திருப்பூர் மாவட்டம் - 641604. வலைதள பொறுப்பாளர் - கே. அமுதவல்லி 7/87, மேற்குத் தெரு, அலங்கியம் அஞ்சல், தாராபுரம் - 638657, திருப்பூர் மாவட்டம்.

### கோவை வடக்கு மாவட்டம்

கோவை வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராக **திருமதி. தே. உஷா ரூபகுமாரி** (7/46, கிருஷ்ணா நகர், சுகுணாபுரம் கிழக்கு, குனியமுத்தூர், கோவை - 641008) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05-01-2026.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

---

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, மாவட்ட துணை, தொகுதி, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் நியமனம்!

DMK IT WING

### தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

திமுக தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, மாவட்ட துணை, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

### ஈரோடு மத்திய மாவட்டம்

ஈரோடு மத்திய மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட திரு. எம் யுவராஜன் அவர்களை அப் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு. எம்.ஜெகநாதன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### கோவை தெற்கு மாவட்டம்

### கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி

கிணத்துக்கடவு தொகுதி ஒருங்கிணைப்பாளர் (களப்பணி) **கோ.பாலமுருளி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

கிணத்துக்கடவு தொகுதி ஒருங்கிணைப்பாளர் (சமூக வலைத்தளம்) **ரா.கோபால்** அவர்கள் நியமிக் கப்படுகிறார்

### சென்னை வடக்கு மாவட்டம்

சென்னை வடக்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திருமதி. R.காயத்திரி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சென்னை வடக்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட திரு.J.செந்தில் சுவாமி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திருமதி.இ. கமலி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக **திரு.திலீபன் மதியழகன்** (சமூக வலைத்தளம்) அவர்கள் நியமிக்கபடுகிறார்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக **திரு.மஞ்சுநாத்** ( களப்பணி ) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### ஓசூர் சட்டமன்ற தொகுதி

ஓசூர் மாநகர மேற்கு பகுதி ஒருங்கிணைப்பாளர் திரு .N. கௌதம்(களப்பணி) அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து,அவருக்கு பதிலாக **திரு. ராஜசேகர்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓசூர் மாநகர மேற்கு பகுதி ஒருங்கிணைப்பாளர் செல்வி. சு.ரேஷ்மா (மகளிர்) அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக. **செல்வி.ஆ சௌமியா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓசூர் மாநகர வடக்கு பகுதி ஒருங்கிணைப்பாளர் **திரு. ம.சக்திவேல்** (களப்பணி) அவர்கள் நியமிக்கப் படுகிறார்.

ஓசூர் மாநகர வடக்கு பகுதி ஒருங்கிணைப்பாளர் திரு. S வசந்தராஜன்(சமூக வலைத்தளம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓசூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு.ராஜேஷ்** (களப்பணி) அவர்கள் நியமிக்கப்படுகிறார்

ஓசூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு. அருண்** (சமூக வலைத்தளம்) அவர்கள் நியமிக் கப்படுகிறார்.

ஓசூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திருமதி.வசந்தா** மகளிர் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓசூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு.வினய்** (களப்பணி) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓசூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு.நவீன்**(சமூக வலைத்தளம்) அவர்கள் நியமிக் கப்படுகிறார்.

ஓசூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திருமதி.வரலட்சுமி** (மகளிர்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓசூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு.முனீந்திரன்** (களப்பணி) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓசூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு.வசந்தராஜ்** (சமூக வலைத்தளம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஓசூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திருமதி.பிரமிளா** (மகளிர்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதி

வேப்பனஹள்ளி தொகுதி திரு. .ரோஷித் (சமூக வலைத்தளம்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.கே.கிருஷ்ண மூர்த்தி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

வேப்பனஹள்ளி மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு .ரோஷித்** (சமூக வலைத்தளம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சூளகிரி தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு. சிலம்பரசன்** (களப்பணி) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சூளகிரி தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. G. கார்த்திக் (சமூக வலைத்தளம்) அவர்களை அப் பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு . திம்மராஜன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சூளகிரி தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. மாலா (மகளிர்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திருமதி.லட்சுமி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சூளகிரி வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. கணேஷ் (களப்பணி) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.M.முருகேஷ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சூளகிரி வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. கோ.முரளிகுமார் (சமூக வலைத்தளம்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.வெங்கட்ராஜ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சூளகிரி கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு **எச்.ஆர்.ஹனுமந்த்** (களப்பணி) அவர்கள் நியமிக்கப் படுகிறார்.

சூளகிரி கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திரு.ஜி.கார்த்திக்** (சமூக வலைத்தளம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சூளகிரி கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் **திருமதி.சௌமியா** (மகளிர்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கெலமங்கலம் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. ராஜேஸ்வரி (மகளிர்) அவர்களை அப் பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திருமதி. பிரியா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### தளி சட்டமன்ற தொகுதி

தளி தொகுதி ஒருங்கிணைப்பாளர் **திரு. ரவிசங்கர்** (சமூக வலைதளம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தளி தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. தனுஞ்செயா (களப்பணி) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.கே.மோகன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தளி தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. மாரேகவுடா (சமூக வலைத்தளம்) அவர்களை அப் பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.என்.மாதேஷ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தளி தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. உ. வீணா (மகளிர்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திருமதி.ரா. மீனாட்சி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தளி வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. ரவிசங்கர் (சமூக வலைத்தளம்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.அபு உசைன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அஞ்செட்டி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. சி .ராஜசேகர் (களப்பணி) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.பிரவீன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அஞ்செட்டி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. அறிவழகன் (சமூக வலைத்தளம்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அஞ்செட்டி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. கவுரம்மா (மகளிர்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திருமதி.பார்வதி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கெலமங்கலம் பேரூர் ஒருங்கிணைப்பாளர் திரு. செந்தமிழன் (களப்பணி) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு . ரா.முரளி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கெலமங்கலம் பேரூர் ஒருங்கிணைப்பாளர் **திரு.சல்மான்** (சமூக வலைத்தளம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கெலமங்கலம் பேரூர் ஒருங்கிணைப்பாளர் திருமதி. சஹீனா காதர் (மகளிர்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திருமதி. செங்கமலவல்லி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கெலமங்கலம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. கிரண்குமார் (களப்பணி) அவர்களை அப் பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.கங்கப்பா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கெலமங்கலம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திரு. ரவீந்திரன் (சமூக வலைத்தளம்) அவர்களை அப்பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.ராஜேந்திரன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கெலமங்கலம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திருமதி. ம.சரண்யா (மகளிர்) அவர்களை அப் பொறுப்பில் இருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திருமதி.நாகரத்னா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி
தொழில்– முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம், வௌவால்தொத்தி கிராமத்தில் ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கான கட்டுமான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். நிகழ்வில் புதூர் மத்திய ஒன்றியச் செயலாளர் ராதாகிருஷ்ணன், மாவட்டப் பிரதிநிதிகள் முருகேசன், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.